Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Vol. 69 அவர் உமது மனவிருப்பத்தின்படி... உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக. சங்.20:4 செப்டம்பர் 2023 No.9

சபையும் உலகமும்

The Church and the world

Adolph Saphir (1831 - 1891)

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் ஆமென்" மத். 28:19-20.

சபை என்பது கிறிஸ்துவின் பிரதிநிதியும் அவரது தொடருமாகும். "நான் இனி உலகத்திலிரேன்; இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்" யோவா. 17:11 என்று இயேசு சொன்னார். கிறிஸ்து வின்றி சபைக்கு ஒளியோ ஜீவனோ இல்லை. அவரது பிரசன்னம் நம்மோடு செல்லாவிட்டால் இந்த உலகமாகிய வனாந்தர யாத்திரையில் நமது பயணத் தினைத் தொடர முடியாது. கிறிஸ்து சபையோடும் சபைக்குள்ளும் இருக்கி றார். பரலோகத்திலிருந்து இறங்கி வந்த கிறிஸ்து பிதாவை ஒருபோதும் விட்டு விடவில்லை. பரலோகத்திற்கு ஏறிய அவர் சபையை ஒருபோதும் விட்டு விடவில்லை.

கிறிஸ்து, பிதாவினால் அனுப்பப் பட்டது போல சபை கிறிஸ்துவினால் அனுப்பப்பட்டது. இயேசுவானவர் பிதாவின் வெளிப்பாடாகவும், பிரதிநிதி யாகவும் அவரை சாட்சியாக அறிவிக் கவும், அவரது சித்தம் செய்யவும், அவரது பணியினை நிறைவேற்றவும் அனுப்பப் பட்டார். அவர் உண்மையானதும் உத்த மமான சாட்சியாயிருந்தார். அவர் பரிபூரண வேலையாளாயிருந்து பிதா வின் சித்தம் செய்வதே தனது போஜனம் என்றார். தேவனுடைய நாமத்தை அறிவித்ததுடன் அவரது பணியையும் செய்து நிறைவேற்றினார். இப்போது கிறிஸ்து நம்மை உலகத்திற்குள் அனுப்பு கிறார். நாம் அவருடைய வாழ்வைக் காண்பிக்க வேண்டும். அவருக்கு சாட்சியாயிருக்க வேண்டும். அப்படி யாக அவரது ஒளி, அன்பு என்பவை பிரகாசித்து நம்மூலமாக மக்களைக் கவர்ந்து அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். அப்போது கிறிஸ்துவில் மக்கள் பிதாவைக் கண்டது போல கிறிஸ்துவை நம்மில் காண்பார்கள்.

ஜெபம் செய்வதில் அசட்டையாக இருந்தால் நாமும், யாருக்காக நாம் ஜெபிக்க வேண்டுமோ, அவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

உலகத்தின் பார்வை

இவ்வுலகம் கடினமானது. சபை யானது தனது பணியினை ஒடுங்கிய பார்வையில் பார்ப்பதால் தைரியம், அன்பு, கருணை இவைகளை இழக் கலாம் அல்லது மேலோட்டமான வெற்றி யால் தற்கால உலகோடு ஒப்புரவாகி எண்ணிக்கையை அதிகரிக்கலாம். இவர் கள் மரித்தவர்களும், புதுப்பிக்கப்படாத வர்களும், ஆவி அற்றவர்களும் அதனால் கிறிஸ்துவின் அன்பு இல்லாதவர்களு மாகும்.

ஒரு புறத்தில் சபையும் உலகமும் வித்தியாசமாக இருந்தாலும் இரண்டும் முரண்பாடுள்ளவையல்ல. ஒன்று இயற் கையின் வட்டத்திற்குள்ளும் மற்றது ஆவியின் வட்டத்திற்குள்ளுமாக அமைந் துள்ளன. உலகம் முதல் ஆதாமுக்குரியது (விழுதலுக்கு முன்) அதனால் பூமிக் குரியது. சபை இரண்டாம் ஆதாமாகிய ஆவிக்குரிய மனிதனாகிய பரத்திலிருந்து வந்த கர்த்தருக்குரியது (1கொரி.15:47) சிருஷ்டிப்பைப் பார்க்கும் போது உலகம் நல்லது. தேவனுக்குப் பிரியமானது. அது சபைக்காக உருவாக்கப்பட்டது.

ஆனால் உலகம் இன்னொரு ஒளியில் பார்க்கப்பட வேண்டும். அது பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. மனித குலம் விழுந்து விட்டது. எனவே நாம் தீய உலகில் வாழ்கிறோம். எனவே உலகி லுள்ள சுயநலம், பெருமை, இச்சை, வெறியான காரியங்களில் நம்பிக்கை, ஆவிக்குரிய காரியங்களில் நம்பிக்கை யின்மை, நமது மகிமையைத் தேடுதல் ஆகிய தேவனை விட்டு பிரிக்கும் எல்லாக் காரியங்களும் நம்மில் காணப்படுகிறது. சபை இந்த உலகத்துக்கு எதிராகத் தொடர்ந்து போராட வேண்டும். அது இயற்கைக்கும் கிருபைக்கும், மாம்சத் துக்கும் ஆவிக்கும், கிறிஸ்துவுக்கும் அந்திக் கிறிஸ்துவுக்கும், சாத்தானுக்கும் தேவனுக்குமுள்ள எதிர்ப்பை உறுதிப் படுத்த வேண்டும். உலகத்தின் அதிப தியும், உலக ஆவியும் ஏற்கெனவே நியாயந்தீர்க்கப்பட்டாயிற்று என்று கூற வேண்டும். தேவனுக்கு எதிரானவர் களுக்கு வரும் கோபத்தையும் கூறி மக்கள் உலகத்திலிருந்து தங்களை வேறு படுத்திக் கொள்ளவும் தங்களை வரும் தலைமுறையினின்று இரட்சித்துக் கொள்ளவும் அறிவுறுத்த வேண்டும். தலையாகிய கிறிஸ்துவின் அங்கங்கள் கட்டுப்பாட்டுடனிருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

இந்த உலகத்தின் ஞானம் இயேசு விலிருந்தது போன்ற சத்தியத்தைக் கண்டு கொள்ள முடியாது. இரட்சகர் முன் மொழிந்தது போல உலகம் நம்மைப் பகைக்கும். கிறிஸ்துவின் சாயலை நாம் எவ்வளவாகக் காண்பிக்கி றோமோ, எவ்வளவு நெருக்கமாக அவரைப் பின்பற்றி சாட்சியாக வாழ்கி றோமோ அவ்வளவாக பகைமையையும் துன்புறுத்தலையும் உலகமும், தேசங் களும் நமக்குத் தரும். ஏனெனில் உலகம் தனக்குரியவைகளை சினேகிக்கும். பரத் துக்குரியவைகளை நேசிப்பதில்லை.

நமது நம்பிக்கை கிறிஸ்துவிடம் திரும்பி வருவதில் இருக்கிறது. நம் சமா தானமும், சூரிய ஒளியுமான நாட்களை யல்ல, புயலும் கொந்தளிப்புமான நாட்களையே எதிர்பார்க்கிறோம். நாம் பாதுகாவலும், தேவ பயமும், சத்தியமு மான காலத்தையல்ல, ஆபத்தும், லௌகீ கமும், தவறுகள் நிறைந்ததும், வன்முறை களாலானதுமான காலத்தையே எதிர் நோக்குகிறோம். ஜலப்பிரளயத்துக்கு முன்பாகவும் சோதோம் கொமோரா அழிக்கப்படும் முன்பாகவும் இருந்த நாட்களை எதிர்பார்க்கிறோம். நியாயத் தீர்ப்பு வருமுன்னாக யூதர்களிலும் புற ஜாதிகளிலும் சபையில் சேர்த்துக்கொண்டு திரளான மக்களை ஆசீர்வதிப்பார்.

கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுங்கள்

சபை தன்னை உலகத்தால் கறைப்படுத்தாமலிருக்கவும் கிருபை யிலும் தெய்வீகத்திலும் வளரவும் கர்த்தரின் சிந்தையையுடையதாக வேண்டும். அவர் பிதாவினால் அனுப்பப் பட்டு இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தார். நன்மை செய்கிற வராய் சுற்றி நடந்தார். தெய்வீக அன்பை பரிசேயருக்கும் ஆயக்காரருக்கும் அறிவித்தார். அழிந்து போகிற ஆத்துமாக் களுக்காக மனதுருக்கமற்ற சபை, பாவி களுக்காக மரித்த இயேசுவின் அன்பால் நெருக்கி ஏவப்படாமல், ஊழியம்

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர் உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2023 செப்டம்பர் மாத பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடு துதிக்கிறேன். அன்பு வாசகராகிய நீங்கள் எனக்காக ஜெபித்தீர்கள் நன்றி. இம்மட்டும் உதவி செய்த ஆண்டவர் மேலும் பெலப்படுத்தும்படி தொடர்ந்து தினமும் ஜெபிக்கும்படி மிகவும் தாழ்மையாய் கேட்கிறேன்.

வருகையின் தூதனை நேசிக்கிற தேவனுடைய பிள்ளைகள், எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும் தாங்கும்படி** மிகவும் அன்பாய் கேட்கிறேன்

- ஆசிரியர்

இம்மாத வசனம்

"…. காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; …. இந்த பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் …" 2 இரா. 3:17

இம்மாதமும் பத்திரிகை வாயிலாக உங்களோடு சில வார்த்தைகளை பகிர்ந்து கொள்ள கிருபை செய்தமைக்காக ஆண்டவரை மகிமைப்படுத்துகிறேன்.

8 மாதங்களை கடந்து இந்த 9-வது மாதத்தில் பிரவேசிக்க தேவன் கிருபை செய்திருக்கிறார். இந்த வருட ஆரம்பத்தில் தேவன் தந்த வாக்குத்தத்தம் **"… உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கும் தேசம், வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் முடிவு மட்டும் …"** (உபா.11:12) என்ற வசனத்தின்படி தேவன் ஒவ்வொரு மாதமும் விசேஷித்த விதமாய் நடத்தி, கிருபையாய் தேவைகளை சந்தித்து வருகிறார்.

2 இராஜாக்கள் 2-ம் அதிகாரத்தில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாய் மோவாபின் ராஜா கலகம் பண்ணினான் என்று பார்க்கிறோம். இஸ்ரவேல் தேசம் கர்த்தர் விசாரிக்கும் தேசம், இஸ்ரவேல் ஜனம் கர்த்தருடைய ஜனம். ஆனால் சத்துரு எதிராய் வரும் போது இஸ்ரவேலின் ராஜா யோராம், சேனைகளின் அதிபராம் கர்த்தரிடத்தில் போகாமல் சேனைகளின் பலத்தை நம்பி யூதாவின் ராஜாவாகிய யோசபாத்திடம் செல்லுகிறான். (2 இரா.3:5,6)

யோசபாத் ஏதோமின் ராஜாவையும் அழைத்து கொண்டு, ஏதோம் வனாந்தரம் வழியாய் போகிறார்கள். ஏழு நாள் சுற்றித் திரிந்தபோது அவர்கள் இராணுவத்துக்கும் மிருகஜீவன்களுக்கும் தண்ணீர் இல்லாமற்போயிற்று. அப்போது இஸ்ரவேலின் ராஜா யோராம் ஐயோ, இந்த மூன்று ராஜாக்களையும் கர்த்தர் மோவாபியரின் கையில் ஒப்புக் கொடுக்க வரவழைத்தாரே என்றான். (2 இரா.3:7-9)

நாமும் சில வேளைகளில் யோராம் போன்று சுயமாய் முடிவெடுத்துவிட்டு ஆண்டவர் என்னை கைவிட்டார் என்று அங்கலாய்க்கிறோமா? வனாந்தரத்தில் ஆகாரின் அங்கலாய்ப்பை கேட்டு உதவி செய்த தேவன் நமக்கும் உதவி செய்ய, தேவைகளை சந்திக்க வல்லவராயிருக்கிறார்.

வனாந்தரம், ஏழு நாள் பயணக்களைப்பு, தண்ணீர் இல்லை, நம்பிக்கையற்ற சூழ்நிலை. யூதாவின் ராஜா யோசபாத் நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி **கர்த்தருடைய** தீர்க்கதரிசி ஒருவரும் இல்லையா என்று தேடுகிறான்.

கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலிசா அங்கே இருக்கிறான் என்று அறிந்தபோது மூன்று ராஜாக்களும் எலிசாவை தேடி செல்லுகிறார்கள். (2 இரா.3:11,12)

எலிசா அவர்களுக்காக கர்த்தரிடம் விசாரிக்கிறான். "….கர்த்தருடைய கரம் அவன் மேல் இறங்கி, அவன்: **கர்த்தர்** உரைக்கிறது என்னவென்றால், இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். **நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; …. இந்த பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும்** என்று **கர்த்தர்** சொல்லுகிறார்." 2 இரா. 3:15-17

சத்துரு நமக்கு எதிராய் குடும்பத்தில், வேலை ஸ்தலத்தில், நம்மை சுற்றியுள்ள ஜனங்கள் மத்தியில் கலகம் உண்டு பண்ணும் போது, தேவைகள் பெருகும் போது, நம்முடைய வாழ்க்கை தண்ணீரற்ற வனாந்தரம் போல் காணப்படும் போது, அதிலிருந்து விடுதலை பெற மனுஷ ஆலோசனையை நாடாமல், மனுஷ உதவி தேடாமல், சுய பெலத்தை சாராமல், சேனைகளின் **கர்த்தரிடத்தில்** விசாரிப் போம். சங்கீதக்காரன் சொல்வது போல எனக்கொத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராய் நம் கண்களை ஏறெடுப் போம். கர்த்தர் சொல்லுகிறபடி வாய்க்கால்களை வெட்டு வோம். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து நமக்கு ஒத்தாசை வரும்.

"இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்;" 2இரா.3:18 நம்முடைய தேவைகள் எவ்வளவு பெரிதாயிருந்தாலும், சத்துரு எவ்வளவு வலியவனாயிருந்தாலும், சூழ்நிலைகள் இயற்கைக்கு அப்பாற்பட்டதாயிருந்தாலும் கர்த்தரின் பார்வைக்கு அற்ப காரியமே. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

"மறுநாள் காலமே பலிசெலுத்தப்படும் நேரத்தில், … தேசம் தண்ணீரால் நிரம்பிற்று." (2 இரா. 3:20) அதிகாலையில் நாம் துதி பலிகளை செலுத்தும்போது, கர்த்தர் நம்முடைய தேவைகளை சந்திப்பார். தமது ஜனங்களுக்கு **கர்த்தர்** கொடுத்த தண்ணீர் எதிரிகளுக்கோ இரத்தமாய் தெரிந்தது. "மோவாபியர் அதிகாலமே எழுந்தபோது சூரியன் தண்ணீரின்மேல் பிரகாசித்ததினால் அந்தத் தண்ணீர் அவர்களுக்கு இரத்தம் போல் சிகப்பாய்க் காணப்பட்டது." இஸ்ரவேலர் எழும்பி, மோவாபியரை முறியடித்தார்கள் என்று பார்க்கிறோம் (2 இரா. 3:22-25) கர்த்தர் நமக்காய் யுத்தம் செய்கிறவர். கர்த்தர் பெரிய வெற்றியை கொடுத்தார்.

நாமும் **விசுவாசிப்போம் வெற்றியை சுதந்தரிப்போம்.** தேவன் நமக்கு உதவி செய்வாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

கிறிஸ்துவுக்குள்,
W. சாமுவேல் பின்னி

2024-ம் ஆண்டு பத்திரிக்கை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிக்கை பணியை தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்.

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும்படி வந்த பெரிய தலைவரின் அடிச்சுவடுகளை பின்பற்றாமல், உலக சிந்தையுடையவர்களாயும், சுயநலமுள்ளவர்களாயும், அவிசுவாசம் நிறைந்த தாயும் தனது வாழ்வை ஆபத்துக்கு நேராகக் கொண்டு செல்லுகிறது.

சபை தன்னை உலகத்துக்குள் கொண்டு சென்று வார்த்தையாலும் கிரியையாலும் நல்ல செய்திகளைக் கூறி தன்னைப் பரிசுத்தமாகக் காத்துக் கொள்ள எண்ணுகிறது. தனது பரம மணவாளனுக்கு உண்மையாயிருக்க கறைதிரையற்று ஆத்துமபாரம் நிறைந் திருக்க வேண்டும். அப்போஸ்தல உபதேசத்தின்படி உலகத்திலுள்ளவை களில் அன்பு கூராதிருப்பதற்குப் பதிலாக உலகத்தை அதிகமாக நேசிக்கிறது. நாம் புகழ்ச்சியை விரும்பி, உலகத்தின் ஆவிக்கு நாட்டமுடையவர்களாகும் போது, நமது ஒளி மங்கி, உப்பு சார மற்றுப் போகிறது. சவுலின் ஆயுதங் களால் தாவீது கோலியாத்தை வெல்ல முடியாது. நமக்குப் போதுமானவர் தேவன், நமது ஆயுதங்கள் ஆவிக்குரியவை.

கிறிஸ்துவோடு மரித்தவனும் அவரோடு எழுப்பப்பட்டவனும் மட்டுமே இரட்சகரின் வாழ்வையும் நடையையும் பின்பற்ற முடியும். இயற்கை யானவனும் புதுப்பிக்கப்படாதவனும் இயேசுவினைப் பின்பற்ற முடியாது. ஆனால் இரட்சகரின் கிருபையையும் அவர் உயிர்த்தெழுதலின் வல்லமை யையும் அறிந்து கொள்ளும் போது அவரது வாழ்வின் பாடங்களைப் புரிந்து கொண்டு, கிறிஸ்துவின் ஆவியைப் பெற்று தேவ பிள்ளைகளாக நடக்க முடியும். அவரை அறிவது என்பது ஜீவனுக்கும் தேவ பயத்துக்குமுரிய எல்லாவற்றையும் அறிவதாகும்.

உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது

கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் எல்லாமானவர். ஆயினும் ஒவ்வொரு சரீர அவயமாகிய கிறிஸ்தவனுக்கும் தனிப்பட்ட வாழ்வும், வேலையும், அமைப்பும், பெயரும், நிலையும், தாலந்தும் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் தன் எஜமானுக்கு உத்தரவாதமுள்ள வனாயிருக்க வேண்டும். உலகத்தின் ஒளியாகிய அவர் (மத்.5:16) '**உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது**' என்கிறார். அவரது நிறைவிலிருந்து அவரது குணாதி சயத்தின் தன்மைகளையும், ஆவியின் வரத்தையும், வல்லமையையும் தருகி றார். வாய்ப்புகள் நம்மைச் சுற்றி உள்ளன. பல வரங்களும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. நாம் நமது ஒளியை வீசச் செய்வோம். விசுவாசக் கண்கள் மாத்திரமே இருதயத்தில் வேர் கொண்டிருக்கும் இரகசிய ஆவிக்குரிய விஷயங்களைப் பார்க்க முடியும். ஆனால் அவற்றின் வெளிப்பாட்டினை எல்லாரும் பார்க்க முடியும். ஆவியான தேவன் கண்களைத் திறந்தால் மட்டுமே மக்கள் இயேசுவைக் காண முடியும். ஆனால் ஒருவிதமாகப் பார்த்தால் அவர்கள் பார்க்கவும், நியாயந்தீர்க்கவும், ரசிக்கவும் கூடியவர்கள். உலகம் நமது நற்கிரியைகளை புரிந்து கொள்கிறது. அவை தேவனால் ஏற்பட்டது என தெரிந்து கொள்கிறது. அதனால்தான் நமது நற்கிரியைகளைக் கண்டு உலகம் தேவனை மகிமைப்படுத்தும்படி நமது வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகா சிக்க வேண்டுமென்று இயேசு கூறினார்.

'முழங்காலில் நின்று கொண்டிருக்கும் கிறிஸ்தவன்'

என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி

'Excerpts from the Kneeling Christian'

ஏன் அனேக கிறிஸ்தவர்கள் அடிக்கடி தோல்வியடைகின்றனர்? அவர்கள் மிகக் குறைவாக ஜெபிப்பதால். ஏன் அனேக ஊழியர்கள் அடிக்கடி அதைரியமடைந்து சோர்ந்து போகிறார் கள்? ஏனெனில் அவர்கள் மிகக் குறை வாக ஜெபிக்கிறார்கள்.

தங்கள் ஊழியத்தால் சிலரை மட்டும் இருளிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டு வரமுடிகிறது? ஏனெனில் அவர்கள் மிகக் குறைவாக ஜெபிக்கி றார்கள்.

நமது சபைகள் ஏன் தேவனுக் காக அக்கினியாக எரியவில்லை. ஏனெனில் அங்கே உண்மையான ஜெபம் மிகக் குறைவு.

ஆண்டவராகிய இயேசு எப்போதும் போல வல்லமையுள்ள வராகவே இருக்கிறார். முன்பு போலவே அவர் மக்கள் இரட்சிக்கப்பட ஆவலோ டிருக்கிறார். இரட்சிக்கக் கூடாதபடி கர்த்தருடைய கரம் குறுகிப் போக வில்லை. அவர் தமது கரத்தை நீட்ட நாம் ஜெபிக்க வேண்டும் - அதிகமாக ஜெபிக்க வேண்டும்.

இதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது தோல்வியின் இரகசியம் நமது இரகசிய ஜெபத்தின் குறைவு என்றால் தவறல்ல.

ஜெபம் சர்வ வல்லமையுடையது

ஜெபத்திற்கு பயப்படுவது போல சாத்தான் வேறு எதற்கும் பயப்படுவதில்லை. அவனுடைய மிகப் பெரிய கரிசனை நாம் ஜெபிக்காம லிருக்கச் செய்வது தான். நாம் வேத மாணாக்கராயிருந்து வாஞ்சையோடு வேதத்தைப் படித்தாலும் நாம் ஜெபத்தில் குறைவுபட்டால் அவன் நம்மைக் கண்டு பயப்படமாட்டான். "சாத்தான் நமது கடின உழைப்பைப் பார்த்து நகைக்கிறான், நமது ஞானத்தைப் பரிகாசம் பண்ணுகிறான். ஆனால் நாம் ஜெபிக்கும் போது அவன் நடுங்குகிறான்" என்று ஒருவர் கூறியிருக் கிறார். இவையெல்லாம் நமக்கும் தெரிந்திருந்தும் நாம் ஜெபிக்கிறோமா? வெற்றி கிடைப்பதற்கான அடையாளங் களிலிருந்தாலும் ஜெபிக்காவிடில் தோல்விதான் நம்மைப் பின்தொடரும்.

தேவனுக்கோ மனிதருக்கோ நாம் செய்யக்கூடிய மிகப் பெரிய காரியம் ஜெபமே என்பதை மறக்க வேண்டாம். நாம் ஜெபிக்கும் போது தேவன் கிரியை நடப்பிக்கிறார். நமது சேவையின் கனிகளெல்லாம் ஜெபத்தின் விளைவே. அது ஊழியக்காரனுடைய ஜெபமோ அல்லது அவரைத் தாங்குகிற வர்களுடைய ஜெபமாகவோ இருக்க லாம். நமக்கும் ஜெபிக்கத் தெரியும் என்று சொல்லிக் கொண்டாலும் சீஷர்கள் கதறினது போல, ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கச் சொல்லித்தாரும் என்ற கேட்போம்.

தேவ பக்தர்கள் தங்கள் காலங் களில் இரவெல்லாம் தேவனோடு ஜெபித்து பகலில் மனிதரோடு வல்லமை யாக செயல்பட முடிந்தது என்பது காணக்கூடிய உண்மை.

ஜெபமின்றி எந்த பயனுமில்லை

மனிதனுடைய தாக்கம் இவ்வுலகில் அவனது பேச்சுவன்மை, உற்சாகம், பரம்பரை அல்லது சக்தி யாலல்ல ஜெபத்தினாலே ஏற்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் எந்த மனிதனும் சரியாக ஜெபிக்காவிடில் சரியாக வாழ முடியாது.

நாம் காலை முதல் இரவு வரை கிறிஸ்துவுக்காக உழைக்கலாம். வேதத்தைப் படிப்பதில் அதிக சமயத்தைச் செலவிடலாம். உத்தமமும் உண்மையுமாக வாழலாம். நமது பிரசங்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவைகளாயிருக்கலாம். ஆனால் இவை உண்மையாக பலனளிக்க வேண்டுமென்றால் நாம் அதிகமாக ஜெபிக்க வேண்டும். நாம் ஏராளமான நற்கிரியைகளைச் செய்யலாம். ஆனால் கொலோ.1:10-ல் கூறப்படுவது போல சகலவிதமான நற்கிரியைகளைச் செய்து அதன் கனிகளையும் தர வேண்டும். ஜெபத்தில் கொஞ்ச நேரம் மட்டும் தேவனோடிருப்பது, கொஞ்ச நேரம் மட்டும் சேவை செய்வதற்கு இணை யானது. அதிகமான தனி ஜெபம் மிகுதி யான பரிசுத்த வல்லமையைக் கொடுக்கும். ஜெபத்திற்காக நாம் செய்யும் ஒழுங்குகள் பூரணமாயிருந்தாலும் வேதனையோடு பண்ணும் ஜெபமில்லை.

எழுப்புதல் ஏன் தாமதமாகிறது? என்று மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அதன் ஒரே காரணம் ஜெபக்குறைவு மட்டுமே. கடந்த கால எழுப்புதல் களெல்லாம் ஜெபத்தின் விளைவாக ஏற்பட்டுள்ளன.

தேவன் என்னை ஜெபிக்கச் சொல்வதோடு, அதிகமாக ஜெபத்தில் இருக்கச் சொல்லுகிறார். ஏனெனில் ஆவிக்குரிய பணியின் வெற்றி ஜெபத் தைச் சார்ந்தே இருக்கிறது.

ஜெபம் தேவனை மட்டும் தேடுகிறது

ஜெபம் என்றால் தேவனிட மிருந்து தேவைகளை கேட்பது என்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சொல்லு

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள். நமது செய்திகளை எடுத்துச் செல்ல தேவனை பயன்படுத்து வது தான் ஜெபம் என்று ஒருவர் சொல்லுகிறார். பிச்சைக்காரன் பணக்காரனுடைய வீட்டுக் கதவை தட்டுவதல்ல ஜெபம் அதை விட மேலானது.

உண்மையாக ஜெபம் என்பது தேவனைத் தேடுவதாகும். ஏனெனில் அவரிடந்தான் நமது தேவைகளைப் பெற முடியும். எனவே ஜெபம் என்பது ஆத்துமாவை தேவனுக்கு நேராகத் திருப்புவதாகும். தாவீது உயிருள்ள ஆத்துமாவை உயிருள்ள தேவனுக்கு நேராகத் திருப்புவது என்று விவரிக்கிறார். "கர்த்தாவே உம்மிடத்தில் என் ஆத்து மாவை உயர்த்துகிறேன்" சங்.25:11. எத்தனை அழகான விவரணம்! ஆண்ட வராகிய இயேசு நமது ஆத்துமாக்களை பார்க்க விரும்பும் போது அவரது பரிசுத்தத்தின் அழகு நம்மேலிருக்க வேண்டும். ஜெபத்தின் மூலம் நாம் நமது ஆத்துமாவை உயர்த்தும் போது அவர் சித்தத்தை நம்மிலும் நம்மோடும் செய்ய அவருக்கு வாய்ப்பினை அளிக்கிறோம். அவருடைய விருப்பத்திற்கு நம்மை விட்டு விடுகிறோம். தேவன் எப்போதும் நம் பக்கத்திலிருந்தாலும் நாம் அவர் பக்கத்தில் இருப்பதில்லை. மனிதன் ஜெபிக்கும் போது அது தேவனுடைய வாய்ப்பு.

"ஜெபம் என்பது பரலோகமும் பூமியும் ஒன்றையொன்று முத்தமிடும் தருணம்" என்று ஒரு யூத ஆத்மிகவாதி கூறுகிறார்.

எனவே ஜெபம் என்பது தேவன் நாம் விரும்புவதைச் செய்யக் கட்டாயப் படுத்துவது அல்ல. நமது சித்தத்திற்கு ஒரு விருப்பமற்ற தேவனை வளையச் செய்வ தல்ல. அவர் தமது வல்லமையை வெளி யிட்டாலும் நோக்கத்தை மாற்றுவ தில்லை. "தேவனுடைய விருப்பமற்ற நிலையை மேற்கொள்ள பயன்படுவது ஜெபம் என்று எண்ணக் கூடாது" என்று ஆர்ச் பிஷப் டிரெஞ்ச் சொல்லுகிறார். "அது அவரது உன்னத சித்தத்தை பற்றிக் கொள்வதாகும்".

தேவனையே மையமாகக் கொள்ள வேண்டும்

பிசாசு ஜெபத்தின் மூலமாக நாம் தேவனைத் தேடுவதைத் தடுக்க எல்லா முயற்சிகளையும் எடுக்கிறான். அன்பான தேவனிடம் ஜெபிக்கிறோம் என்ற நினைவை விட்டு நமது மனதை நமது தேவைகளால் நிரப்புகிறான். ஈவுகளை அளிக்கிற தேவனை விட ஈவுகளையே எண்ணச் செய்கிறான். நமது எண்ணங்கள் அவனது கஷ்டங்கள், பயங்கள், நம்பிக்கைகள் மீது செல்லுவ தால் ஜெபம் எங்கோ போய் விடுகிறது.

பிசாசு இவ்வாறு தேவன் மேல் நமது கருத்தை வைக்க விடாமல் செய்து விடுகிறான். எனவேதான் நாம் ஜெபங்களையும் விண்ணப்பங்களை யும் ஏறெடுக்கும் முன்னால் தேவனு டைய மகிமை, வல்லமை, பிரசன்னம் இவற்றை உணர வேண்டும்.

ஜெபத்தில் வியாகுலப்படுவது

எந்த விசுவாசியும் ஆத்தும பாரமும், ஆத்தும வாஞ்சையுமிருந்தால் ஜெபத்தில் வியாகுலப்படாமல் இருக்கவே முடியாது.

ஜான் நாக்ஸ் என்பவரைப் போல **"தேவனே ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும் அல்லது நான் சாகட்டும்"** என்று கதறுவோமா? மோசே தேவனிடத்தில் மிகுந்த வேதனை யோடும் ஆத்தும பாரத்தோடும் ஜெபித் ததை யாத். 32:33-ல் படிக்கிறோமல்லவா? "...இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்கு தெய்வங்களை உண்டாக்கி மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித் தருளும், இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரை கிறுக்கிப் போடும்" என்றான்.

இயேசுவானவர் எருசலேமைப் பார்த்துக் கண்ணீர் விட்டதை நாம் அறிவோம். "அவர் ...பலத்த சத்தத் தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப் பட்டு", எபி.5:7.

அப்படிப்பட்டவர் நாமும் அவ்வாறு தவறு செய்கிறவர்களைப் பார்த்து அழுது புலம்ப விரும்புகிறார். அவரை துக்கப்படுத்துகிற பாவத்தை குறித்து நாம் வியாகுலப்படும் போது அவருடைய இருதயம் சந்தோஷப் படும். அநேக ஊழியர்களில் மனந்திரும் புதல்கள் இல்லாவிட்டால் அதற்கு காரணம் வியாகுலப்பட்டு ஜெபித்தலின் குறைவாகும்.

இயேசுவின் பெயரில்

அவருடைய பெயரில் ஜெபிப் பது என்பது அவரது குணாதிசயத்தில் அவரது பிரதிநிதியாக ஜெபிப்பது ஆகும். அவருடைய ஆவியோடும் அவருடைய சித்தத்தின்படியும் அவர் தேடுவதை தேடுவதும் அவருடைய சித்தம் செய்யும் படி உதவியை நாடுவதும் அவருடைய நாமத்திற்கே மகிமை கொண்டு வருவதற்கு மட்டும் ஜெபிப்பதும் ஆகும்.

அவருடைய நாமத்தில் ஜெபிப் பது அவருடைய விருப்பத்திற்கும் நோக்கத்திற்கும் ஒத்ததாய் இருக்க வேண்டும். சுயம் அதன் நோக்கங்கள் அதன் ஆசைகள் போன்றவை முற்றிலும் தேவனுடைய ஆவியால் கட்டுப்படுத் தப்பட வேண்டும். அப்படியானால் நம்முடைய சித்தங்கள் கிறிஸ்துவின் சித்தத்திற்கு முழுமையாக இணைந்து இருக்கும்.

எழுப்புதலுக்கான ஒரு ஜெபம்

A prayer for Revival

By Charles H. Spurgeon (1834 - 1892)

"உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந் திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?" சங். 85:6.

இந்த ஜெபத்தை நீங்கள் ஏறெடுத்தால் இந்த வசனத்தின் அடிப் படையில் நான் பிரசங்கிப்பதை விட நன்மையாய் இருக்கும். எப்படி ஜெபிக்க வேண்டும் என்று நாம் அறிந்தால் நலமா யிருக்கும். ஆனால் அதை அறியவில்லை. நான் என்னுடைய சகோதர சகோதரி களை ஜெபத்தில் வேண்டிக் கொள்ளும் படி எழுப்பினால் நலம். நாம் நம் அறைவீட்டிற்குள் பிரவேசிப்போம். வலுவாக அவரை நோக்கிக் கூப்பிடு வோம். "உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந் திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?" இத்தகைய ஜெபத்திற் கான சமயம் எது? "கர்த்தாவே உமது தேசத்தின் மேல் பிரியம் வைத்து, யாக்கோபின் சிறையிருப்பை திருப் பினீர்". சங்.85:1

உங்களில் சிலர் கர்த்தர் தமது ஜனங்களின் மத்தியில் மகிமையாக பிரசன்னமானதை ஞாபகப்படுத்தலாம். அவர் தமது புயத்தை மக்கள் மீது வைத்து அவருடைய தெய்வீக பிரசன்னத்தை வேத வசனம் போதிக்கப்படும் போது உணர செய்திருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு நினைவு உங்களுக்கு இருந்தால் இப்படி ஜெபியுங்கள். "ஆண்டவரே நீர் செய்ததை உம்மால் செய்ய முடியும். எங்களை மீண்டும் உயிர்ப்பிக்க மாட்டீரோ? இதை விட மேலான காரியங்களை நீர் செய்ய முடியும். இப்போது வாரும் உமது இரக்கங்களை உமது மக்களுக்கு மறுபடியும் காண்பிக் கும்படி உம்மை வேண்டிக் கொள்கி றோம்".

இத்தகைய ஜெபத்திற்கான இன்னொரு சமயம் நாம் ஒரு மேகத்தின் அனுபவத்தின் கீழோ அல்லது தெய்வீக விருப்பமின்மையின் சமயத்திலோ ஏறெடுக்கலாம். சங்கீதக்காரன் இவ்வாறு கேட்கிறான். "என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரோ? தலைமுறை தலை முறையாக உமது கோபத்தை நீடித் திருக்க பண்ணுவீரோ? உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீ ரோ?" சங். 85:5,6

இந்த சமயத்தில் தேவனுடைய சபை பொதுவாக சுத்தமான நிலையில் இருப்பதை உணருகிறேன். இக்கால கட்டத்தில் தீமைகளை வேதனையோடு உணர்ந்து இதை சொல்லுகிறேன். காலங்கள் இருளாகவும் ஜெப ஆவி பரிசுத்த வாழ்வு ஆகியவை இருக்க வேண்டிய அளவு காணப்படவில்லை. எனவே இந்த காலம் "கர்த்தாவே நீர் எங்களை மறுபடியும் உயிர்ப்பிக்க மாட்டீரோ?" என்று கதற கூடிய காலமா யிருக்கிறது. எனவே தேவ பிள்ளைகளே ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

ஜெபிப்பதற்கான இன்னொரு சமயம் பக்தர்கள் மந்தமாயிருக்கும் காலமாகும். நீங்கள் எப்போதும் ஒன்று போல சுறுசுறுப்பாயிருக்க முடிகிறதா? எப்போதும் சக்தியுள்ளவர்கள் போல

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறீர்களா? இல்லவே இல்லை. எப்போதெல்லாம் நீங்கள் மந்தமாக உணருகிறீர்களோ உங்களுக்கு அப்போது ஜெபிக்க ஒரு ஜெபமிருக்கிறது. "ஆண்டவரே மறுபடியும் நீர் எங்களை உயிர்ப்பிக்க மாட்டீரோ? எங்களை மறுபடியும் விழித்து எழும்பச் செய்யும். உமது பலவீனமான பிள்ளைகளில் புது பெலனை ஊற்றும். வெது வெதுப்பான உங்கள் பிள்ளைகளில் உயிருள்ள அக்கினியைப் போடும். தூக்க மயக்கமான உமது பிள்ளைகளை உயர் நிலைக்குக் கொண்டு வாரும்".

நமது முயற்சிகள் பயனற்றுப் போகும் தருணங்கள் ஜெபிப்பதற்கு ஏற்ற ஒரு காலம்: சிலரை மனந்திரும்ப எடுத்த முயற்சிகள் இறுதியில் தோல்வியடையலாம், ஊழியக்காரர்கள் உங்கள் பணியை நிறுத்திவிட வேண்டாம். இந்த ஜெபத்தினை தீவிரமாகவும், கடுமையாகவும் கூறுங்கள். "ஆண்டவரே நீர் எங்களை மறுபடியும் உயிர்ப்பிக்கமாட்டீரோ? பெருக்கமான ஆவிக்குரிய வாழ்வை மறுபடியும் அனுப்பும். ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதில் மிகப் பெரிய வெற்றியின் காலங்களைத் தாரும்".

அனேகர் பின்மாற்றமடையும் காலத்தில் இப்படி ஜெபிக்கலாம். எப்போதும் சிலர் ஆவிக்குரிய சுகவீனராக, பின்னாகச் செல்வதும், வீழ்ச்சியடைவதும் உண்டு. நன்றாக ஓட முடியாதவர்களைக் குறித்து நாம் மனம் உடைவதுண்டு, அக்காலங்களில் கேட்க வேண்டியது எது அவர்களைத் தடைப்படுத்தியது? சிலர் தேவ பணியிலே மிகதைரியமாக இருந்தும் இப்போது தேவ வீட்டைத் தவிர்த்து அவரது வழிகளை விட்டு, அவரது பரிசுத்த நாமத்தையும் மறுதலிக்கிறார்கள். அப்போது இந்த ஜெபம் நமது இருதயத்திலிருந்தும் நாவிலிருந்தும் எழும்ப வேண்டும். "ஆண்டவரே, எங்களை மறுபடியும் உயிர்ப்பிக்க மாட்டீரோ?" மகா பெரிய மேய்ப்பரே வந்து அலைந்து போன ஆடுகளை திரும்பக் கொண்டு வாரும். தூய ஆவியானவரே வாரும் உம்மை வருந்தி அழைக்கிறோம். உமது உயிர்ப்பிக்கும் மூச்சினாலே மூர்ச்சித்து சாகவிருக்கும் ஆடுகளை உயிரூட்டி ஆவிக்குரிய ஆரோக்கியம் அளிப்பீராக.

ஜெபத்தின் சாரம்

"ஆண்டவரே எங்களை மறுபடியும் உயிர்ப்பிக்க மாட்டீரோ?" என்ற ஜெபம் நாம் தேவனைச் சார்ந்திருப்பதைக் காண்பிக்கிறது. ஆண்டவரே, உம்மைத் தவிர யாரும் எங்களை உயிர்ப்பிக்க முடியாது என்பது உண்மையாய் இப்படி ஜெபிப்பதின் மூலம் வெளிப்படுகிறது. தேவன் அல்லாமல் சபை உயிர்ப்பிக்கப்பட முடியாது. ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படவோ, ஒரு பக்தன் உயிர்ப்பிக்கப்பட்டு வளரவோ தேவனுடைய செயலின்றி முடியாது.

அடுத்ததாக இந்த ஜெபம் தேவனிலுள்ள உறுதியைக் காண்பிக்கிறது. "ஆண்டவரே, நீர் எங்களை திரும்ப உயிர்ப்பிக்க முடியும். நீங்கள் உளையில் அதிக ஆழமாக மூழ்கவில்லை. நீர் எங்களை தூக்கி எடுக்க முடியும். நாங்கள் நீர் ஜீவனளிக்கக் கூடாதபடி நாங்கள் சாகவில்லை. எங்களை உயிர்ப்பிக்க மாட்டீரோ"? எங்களால் இது கூடாதது. ஆனால் உம்மால் இது கூடும். உமது கரத்தின் ஒரு தொடுதல், உமது உதடுகளின் ஒரு மூச்சு எல்லாம் செய்து விடும். சகோதர, சகோதரிகளே, நாம் தேவனை விசுவாசிக்கிறோம். அப்படியானால் சபை எந்த நிலையிலிருந்தாலும் அதிலிருந்து அவர் வெளியே கொண்டு வர முடியும். இதிலிருந்து விலகி ஓடி விட்டு, தேவன் ஒரு போதும் சபையை ஆசீர்வதிக்க முடியாது என்று சொல்லக் கூடாது. அவர் ஆசீர்வதிக்க முடியும். உங்கள் ஜெபத்தின் சாரம் "கர்த்தாவே எங்களை மறுபடியும் உயிர்ப்பிக்க முடியும். நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். அதை எதிர்பார்த்திருக்கிறோம்".

அடுத்து இந்த ஜெபம் தேவனோடுள்ள இடைவிடாத தொடர்பைக் காண்பிக்கிறது. இது உத்தமமான கெஞ்சுதல், தேவனைத் தொந்தரவு செய்து கட்டாயப்படுத்துகிறது. இவ்வாறு அன்பர்களே, சபைக்காக இப்படி ஜெபியுங்கள். ஆறு பேர் மட்டும் போதும். சிறிது நேரம் கதவைப் பூட்டி தேவனிடம் எழுப்புதலுக்காகக் கதறி அழுதால் தொடர்ந்து கதறினால் மிகுந்த நம்பிக்கையுண்டு.

நாம் ஜெபத்தில் இணைந்து காத்திருந்து அவர் பேசுவதைக் கேட்போம். கேட்க வேண்டிய முறைப்படி நாம் கேட்டால் அவர் சமாதானத்தைப் பேசுவார். நீங்கள் இரவும் பகலும் இவ்வாறு ஜெபியுங்கள். "உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்து களிகூர்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?"

அவரில் மகிழ்ந்து களிகூருங்கள்

தேவன் ஒரு எழுப்புதலை அனுப்பப் பிரியம் கொண்டால் மக்கள் அவரில் களிகூருவார்கள். ஏனெனில் அவர்கள் எழுப்புதலைடந்து விட்டார்கள். அவர்களது உணர்வற்ற நிலையிலிருந்து அவர்களது ஆவி விடுவிக்கப்பட்டதால் மகிழ்ச்சியாலும் நன்றியாலும் களிகூருவார்கள். தேவன் பெரிய காரியங்களை அவர்களுக்குச் செய்தார். பாவிகள் மனந்திரும்பியபடியால் இரட்சிக்கப்பட்டவர்களாலும் அவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

நான் சிந்திக்கும் போது தேவனுடைய அனைத்து குணநலன்களையும் தியானிக்கிறேன். அவர் வல்லமையுள்ள தேவன் அதற்காக அவரை நான் ஸ்தோத்தரிக்கிறேன். அல்லேலூயா. அவருக்கே அவர் எல்லாவற்றையும் செய்யக் கூடியவர். அவரது வல்லமையெல்லாம் நீதிக்காகவும் சத்தியத்திற்காகவும் பயன்படுத்தப்படும். அவரை அன்பின் தேவனாக நேசிக்கிறேன். அவரது நியாயம் எதிர்பேசக் கூடாதது. அவரது சத்தியத்திலும் களிகூருகிறேன். அவரது உத்தமம் மேலானது. அவர் பொய் சொல்ல மாட்டார். அவர் மாறாதவர், அவர் நித்தியவாசி. எனவே மரிக்கவோ, தளர்ந்து போகவோ மாட்டார். முடிவில்லாத அவரது பண்புகளை என்னால் கூற முடியாது. ஆனால் அவரது பண்புகள் யாவும் நம்மை மகிழ்விக்கின்றன. இதுவே எழுப்புதலின் கிரீடம். தேவ ஜனம் அவரில் மகிழ்ந்து களிகூருகிறது.

"ஆண்டவரே, எங்களைத் திரும்பவும் உயிர்ப்பியும். ஆண்டவரே, என்னை உயிர்ப்பியும். இந்த விண்ணப்பத்திற்கு நாம் ஒவ்வொருவரும் 'ஆமென்' என்போமாக. ஆண்டவரே எங்கள் போதகரை உயிர்ப்பியும். சபையின் மூப்பர்களை உயிர்ப்பியும். ஆண்டவரே பணியாளர்களையும் உயிர்ப்பியும். சபை அங்கத்தினரை உயிர்ப்பியும். பின் வாங்கிப் போனவர்களை உயிர்ப்பியும். கவலையீனமாய் வாழ்வோரை உயிர்ப்பியும். உலகமனைத்திலுமுள்ள சபைகளை ஆண்டவரே உயிர்ப்பியும். எழுப்புதலின் ஆவியே எங்கள் மேல் இப்போதே வாரும். இயேசுகிறிஸ்துவின் மூலம் ஆமென்".

உடைந்த ஆனால் நிரம்பிய பாத்திரம்

A broken but filled vessel

Jonathan Goforth சீன மிஷனெரி (1859 - 1936)

சீன தேசத்திலே செய்தித்தாள் பயன்படுத்தும் முன்னால் கதை சொல்லுதல் பிரசித்தமாயிருந்தது. வெளிப்புற செய்திகளை அறிய அது மட்டுமே வழியாயிருந்தது. கதை சொல்லுகிறவர் பூர்வ நாட்களிலும், தற்காலத்திலும், வீட்டிலும், சுற்றிலுமுள்ள எல்லாவற்றைக் குறித்தும் சொல்ல வேண்டும். வாங்ஃபூலின் என்பவர் ஒரு சிறந்த கதை சொல்லுபவர். ஒவ்வொரு இரவிலும் பலமணி நேரங்கள் பெரிய கூட்டமான மக்களைச் சேர்த்து கதை சொல்லி தனது ஜீவனை நன்கு நடத்தி வந்தார்.

சிறுவயதிலேயே அவர் ஓப்பியம் சாப்பிடும் பழக்கத்தில் விழுந்து விட்டார். அது அவர் தொண்டையை பாதித்து விட்டபடியால் காலங்கடந்த போது கதை சொல்லுவதை விட்டுவிட வேண்டியதாயிற்று. எனவே ஜீவனத்திற்காக சந்தைகளிலும், தியேட்டர்களிலும் சூதாடும் கூடாரம் அமைத்து வாழ்ந்து வந்தார்.

நானும் மனைவி றோசலிண்ட்டும் இவரை முதலில் சந்தித்த போது அவர் 38 வயதுடையவராயிருந்தார். அப்போது அவர் முற்றிலும் சீர ஆவிக்குரிய குறைவுடையவராயிருந்தார். கூனராகவும் வெறும் எலும்பும் தோலு முடையவராகவும் காணப்பட்டார். அந்த வேளையில் நான் 10 நாட்களை அவனது சொந்த பட்டணமாகிய Hsintsun-ல் செலவு செய்தேன். எல்லா பிற்பகல் வேளைகளிலும் அவன்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓப்பியம் சாப்பிட சத்திரத்தின் மேற்கு அறைக்குச் செல்லுவான்.

ஒரு சாயங்கால வேளையில் நான் அவனிடம்: "வாங்ஃபூலின் உனக்காக நடுங்குகிறேன். நீ தெரிந் தெடுத்த பாதை நேராக நரகத்திற்குச் செல்லுகிறது. ஓப்பியம் நாட்டத்தை இங்கு கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொல்லுகிறாய். ஆனால் அங்கு (நரகத்தில்) இந்த நாட்டம் பத்தாயிரம் மடங்கு அதிகரிக்கலாம். ஆயினும் ஓப்பியத்தின் சாம்பலைக் கூடப் பெற்று உன் நாட்டத்தைத் தணிக்க முடியாது" என்றேன்.

அவன் உடைந்த குரலில் பேசினான். "நீங்கள் சொல்லுவது மிகவும் சரி. நான் புதிய ஏற்பாட்டினை வாசித்து எனக்குக் காத்திருக்கும் அவலநிலையை நன்கு அறிந்திருக்கிறேன். நான் அடிக்கடி இந்த பயங்கர பிடியிலிருந்து அவிழ்க்கப் பட முயற்சித்திருக்கிறேன். முடிய வில்லை. எனவே நம்பிக்கை இழந்து விட்டேன்" என்று பதிலளித்தான்.

நான் அவனைப் பார்த்து: "நீ இவ்வாறு பேசக் கூடாது. நமது இரட் சகரில் நம்பிக்கை உண்டு. இரட்சகர் வழியாக தேவனிடம் வருகிற எவரையும் அவர் இரட்சிப்பார். நீ சூவாங் சென்று Dr. மால்கம் எதைச் செய்ய முடியும் என்று பார்" என்றேன்.

"இவ்வளவு தூரம் நான் எப்படி நடக்க முடியும்? இது 45 கிலோ மீட்டர் தூரம். எனது உயிரைக் காக்க இவ்வளவு தூரம் நடக்க முடியாது" என்று பதிலளித் தான்.

"எனக்காக ஒரு வண்டி வருகிறது. நீ என்னோடு வரலாம்" என்றேன். (எனக்கு டைபாய்டு காய்ச்சல் இருந்தபடி யால் இந்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்த)

ஃப்பூலின் தொடர்ந்து மறுத் தான். "டாக்டர் என்னை ஏற்றுக் கொள்ள 500 பணம் நான் கொடுக்க வேண்டும். ஆனால் என்னிடம் பணமில்லை" என்றான்.

மீண்டும் நான் அவனைப் பார்த்து "பணத்தைப் பற்றி கவலைப் படாதே நான் டாக்டரோடு பேசுகிறேன். நீ என்னோடு வந்தால் மட்டும் போதும்" என்றேன். அவன் ஆஸ்பத்திரியில் ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

கட்டு உடைக்கப்பட்டது

டாக்டர் என்னைப் பார்த்து "நீங்கள் உங்கள் பகுதியைப் பார்த்துக் கொள்ளுங்கள். மருந்து இருக்கிறது. உங்களால் இயன்றவரை அவன் தனது துன்ப நிலையை நினைக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார்.

ஒரு நாளில் பல தடவைகள் அவனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து உபசரித்து மேல் நாட்டின் படங் களைக் காண்பித்து அவனோடு ஜெபித்து வந்தோம். ஐந்தாம் நாள் அவன் மூளை குழம்பினவன் போல் காணப்பட்டான். அவனுக்குக் காவலாக ஒருவரை நியமித் தோம். பின்பு அவனது பாடுகள் நீங்கி விட்டன. பதினைந்தாவது நாள் ஓப்பிய நாட்டம் குறைந்தவனாக வீடு சென்றான்.

ஓப்பியம் பயன்படுத்துகிறவர் களை நாம் நம்பவே முடியாது. அந்தக் குடும்பத்தின் நிலை பரிதாபமாகவே இருந்தது. எனினும் அவனை ஒரு வருடங்கள் சந்திக்காமலும் சுவிசேஷ பணியில் ஈடுபடுத்தாமலும் இருந்தோம். தேவ நடத்துதலுக்காக காத்திருந்தோம்.

மிகப் பொறிதான ஒரு தேவை

அக்டோபர் 1895-ல் நான் மனைவி றோசலிண்டுடனும், பிள்ளை களுடனும் சாங்டே என்ற இடத்திற்குச் சென்று குடியேறினோம். அந்த இடத்தில் இதுவரை அயல் நாட்டார் சென்ற தில்லை. எனவே எங்களைப் பார்க்கத் திரள் கூட்டமான மக்கள் மிகுந்த ஆவலுடன் எங்கள் காலை உணவு நேரங் களிலிருந்து சூரியன் மறையும் வரை ஜன்னல் வழியாக பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அவர்களுடைய நட்பைப் பெற்று சுவிசேஷம் அறிவிப்பது எப்படி என்று எண்ணிக் கொண்டிருந்தோம். ஆண்கள் முன்புற முற்றத்தில் அமர்த்தப் பட்டனர். பெண்களும் பிள்ளைகளும் பின்புற முற்றத்தில் என் மனைவி பிள்ளைகளிருந்த இடத்தில் அமர்த்தப் பட்டனர்.

எனக்கு உதவி செய்ய ஒரு ஊழியரோ, எனது மனைவிக்கு உதவி செய்ய வேதாகம ஸ்திரீயோ இருக்க வில்லை. இந்த திரள் கூட்டத்தை கவனிப் பதோடு புது மிஷன் நிலையங்கட்ட நோக்கமாயிருந்தேன். சில வேளைகளில் நாங்கள் இருவரும் களைத்துப் போகிற துண்டு. இவ்வாறு இரண்டு வாரங்கள் கடந்தன. ஒரு நாள் மனைவியிடம் சென்று "நம்முடைய தேவன் நமது தேவைகளையெல்லாம் சந்திப்பார் என்பதை நாம் விசுவாசிக்கிறோமா? அப்படியானால் நாம் முழங்காற்படி யிட்டு சுவிசேஷத்தினை பிரசங்கிக்க நமக்கு உதவி செய்ய ஒரு நபரை தரும் படி கர்த்தரிடம் கேட்போம்"என்றேன். தேவன் ஜெபத்திற்குப் பதிலளித்தார். தாமதமின்றி வாங் ஃபியூலின் தனது இல்லத்திலிருந்து எங்களிடம் வர புறப்பட்டான்.

எதிர்பார்க்க முடியாத ஒரு ஊழியக்காரன்

எங்களுடைய மிஷன் வாசலை வாங் அடைந்தது தேவனுடைய உதவியின் அபிப்பிராயமாயிருந்தது. அவனது தோற்றம் ஒரு பிச்சைக்கார னுடைய தோற்றம் போலிருந்தது. காலணிகளுக்குள்ளிருந்து விரல்கள் வெளியே தெரிந்தன. கிழிந்த தொப்பியும் கண்டி போடப்பட்ட அழுக்கான ஆடையும் அணிந்திருந்தான். உண்மை யாகச் சொன்னால் "மனிதன் பார்க்கிறது போல தேவன் பார்ப்பதில்லை". நான் அவனைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன்.

அவனிடம், "வாங் தேவன் இச்சமயத்தில் எங்களுக்கு உதவி செய்ய உன்னை அனுப்பினார். நீ இங்கு எங்களோடு தங்கி சுவிசேஷம் அறிவிப் பாயா?" என்றேன். அவனும் "நிச்சயமாக உதவி செய்வேன்" என்றான்.

இந்த நிலையில் அவனை மேடையில் ஏற்றுவது கேள்விக்குரி யானது. நான் சீன உடையணிவதினால் அவற்றில் ஒன்றை அவனுக்கு உடுத்திய போது அவன் சிற்றாலயத்தில் பிரசங்கிக்க தகுதியாய் காட்சியளித்தான்.

கடந்த காலங்களில் கதை சொன்ன திறமைகளெல்லாம் அவனுக்கு வந்து விட்டன. அவனது பேச்சின் ஒழுங்கும் தாக்கமும் எதிர்ப்புகளை மாற்றியது. வேத புத்தகத்தின் வீரர்களை உயிரூட்டமுடன் மக்களுக்குப் போதித் தான். திருந்திய மைந்தனுடைய கதை தன்னுடைய வாழ்க்கைக்கும் பொருத்த மானதாயிருந்ததால் எந்தப் பாவியையும் ஆண்டவர் ஏற்றுக் கொள்வார் என்பதை உறுதியாக அறிவித்தான்.

சரீர பெலவீனம் அதிகரித்தாலும் மூன்று ஆண்டுகள் அவன் ஆவிக்குரிய பெலனால் ஊழியம் செய்தான். அவன் மரணத்துக்கு சமீபமாயிருப்பதை உணர்ந்து, 'மரிக்கும் ஒருவன் மரிக்கிறவர் களுக்கு' பேசுவது போல பேசுவான். ஆண்டவருடைய கிருபைக்கு சாட்சியா யிருந்தான். கதை சொல்லும் வாங் இரட்சிக்கப்பட்டவனாக மரிக்கும் வரை சிலுவையின் கதையைக் கூறி அறிவித்து இரட்சகருடைய சமுகத்தை அடைந்தான்.

அலட்சியமாயிருப்பதற்கான சமயமல்ல

Too serious an hour for trifling

Lois J. Stucky (1924 - 2014)

நாம் ஜீவித்திருப்பதற்கே காரண மான நமது தூய சர்வவல்ல தேவனுக்கு நாம் எவ்வளவாக மதிப்பையும் மகிமை யையும் சந்தோஷத்தையும் கொடுக்க வேண்டும்! தமது நேச மணவாட்டியாக நம்மை மீட்டுக் கொண்ட அவருக்கு நமது முழு பக்தியையும் முக்கியத்துவத் தையும் வாழ்வில் அளிக்க வேண்டாமா? உலகத்தின் மற்றும் மாம்சம், பிசாசு ஆகிய வற்றின் கவர்ச்சியால் ஆதியிலிருந்த அன்பை இழந்து, உபதேசத்தில் விலகி உலகத்தோடு ஒப்புரவாகி வெது வெதுப் பான நிலையை அடைந்து விட்டோம்.

இன்றைய வேகமான கலாச் சாரத்தின் சுயநல வாழ்வில் ஆதி கிறிஸ்தவர்களின் தேவ பயம் விழுந்து போனது. உத்தம கிறிஸ்தவர்களாக நாம் இணைந்து, "எவைகளைக் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்று கிறிஸ்து எதிர்பார்க்கிறார்" என்று சில நிமிடங்கள் சிந்திப்போம்.

முக்கிய கரிசனை என்னவென் றால் நமது நித்திய கால நிலை! நமது ஆத்தும இரட்சிப்பினைக் குறித்தும் நித்திய வாழ்வைக் குறித்தும், "ஆரம்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக் கொண் டிருப்பதில் அலட்சியமாயிருக்கக் கூடாது" எபி. 3:14.

வேத வசனத்தில் அலட்சிய மாயிருக்கக் கூடாது. சங். 119:105-ல்"வேத வசனம் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது" என்றும், அவைகள் எல்லாம், "உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்த லுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின் றன". 2 தீமோ. 3:16 என்றும் படிக்கிறோம். தினமும் அதைப் படிக்க கவனமாயிருக்க வேண்டும். அதை வாசிக்கவும், படிக் கவும், தியானிக்கவும், மனப்பாடம் செய்யவும், ஆழமாய் தியானிக்கவும், ஆவியானவரின் துணையுடன் செயல் பட வேண்டும். நமக்குப் போதிக்க நல்ல வரம் பெற்றவர்களையும் ஆவலுடன் தேட வேண்டும்.

மேலும் ஜெபம் செய்வதில் அசட்டையாக இருந்தால் நாமும் யாருக்காக நாம் ஜெபிக்க வேண்டுமோ அவர்களும் பாதிக்கப்படுவார்கள். தேவன் ஜெபத்தை மனிதனுக்கும் தேவனுக்குமிடையில் தொடர்பாகவும் அவருடைய இராஜ்யம் நம்மிலும் உலகிலும் வளர ஆதாரமாகவும் முக்கிய மானதாகவும் ஏற்படுத்தியிருக்கிறார். ஆனால் இதனை எளிதாக எடுத்துக் கொண்டு விரும்பும் போது மட்டும் ஜெபிப்பதும் அனேக முக்கிய மற்ற காரியங்களுக்கு இடங்கொடுத்து விட்டு இறுதியாக ஜெபிப்பதும் கூடாது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாயிருப்பதில் அலட்சியம் கூடாது. இயேசுவானவர் பல தடவைகள் ஆயத்தமாயிருங்கள் என்று கூறியுள்ளார். நம்மைச் சுற்றிலும் மக்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆண்டவர் சொல்லுகிறார், "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகை யிலே வருவாரென்று நீங்கள் அறியா திருக்கிறபடியினால் விழித்திருங்கள்.... நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" மத். 24:42,44.

"ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூட கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப் பட்டது" மத். 25:10. கர்த்தருடைய வசனத்தைப் பாருங்கள்

ஆவிக்குரிய வாழ்வில் நான் அசட்டையாயிருந்தால் நான் மனந் திரும்பி, அப்போஸ்தலனாகிய பவுலைப் போல புதிய ஆர்வத்தோடும் தேவ கிருபையோடும் இலக்கை நோக்கித் தொடர வேண்டும்.

நாமெல்லாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய உலகமெங்குமுள்ள தேவ பிள்ளைகளை நேசித்து அவர் களோடு ஜெபத்தில் இணைய வேண்டும். அதன் மூலம் இந்த சரீரத்தை பரிசுத்தமாக்கவும், முதிர்ச்சியடையச் செய்யவும், பரிபூரணப்படுத்தவும் வேண்டும். தலையாகிய கிறிஸ்து விலை யேறப் பெற்றவர்.

போதகர்கள், மிஷனெறிகள், கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் யாவரும் தூய ஆவியின் அன்பு, வல்லமை ஆகிய வற்றால் நிரப்பப்பட ஜெபியுங்கள்.

முதியோர்கள் தங்கள் முதிர் வயதிலும் பெலன் பெற்று கிருபையில் நிறைந்து கனி கொடுக்க ஜெபியுங்கள்.

குடும்பங்களை நடத்தும் பெற்றோர் தெய்வீக பெலனையும் ஞானத்தையும் பெற்று கர்த்தருடைய பாதையில் பிள்ளைகளை நடத்த அவர் களுக்காக ஜெபியுங்கள்.

இளைஞர்களும் பிள்ளைகளும் கர்த்தரை பெலனோடும் உற்சாகத் தோடும் நேசிக்கவும், கீழ்ப்படியவும் அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்கள் பல அழுத்தங்களுக்கு எதிராகத் தனியாக நிற்க வேண்டும்.

கிறிஸ்து மீண்டும் வருகிறார்

Christ is coming again

A.J. Gordon

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. நாம் நடக்கக்கூடிய அல்லது சாத்தியக்கூறான ஒரு நிகழ்வுக்காக விழித்திருக்க அழைக்கப்படவில்லை. அவர் எப்போது வருவார் என்று கூறப்படா விட்டாலும் அவர் வருவார் என்பது மட்டும் நமக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வேத வாக்கியங்கள் அவரது வருகையின் நிச்சயம் என்பதை எழுத் தாலும், காட்சியாலும், நபரத்துவத் தாலும் அதிகமாகக் காண்பிக்கின்றன.

"...உங்களிடத்தினின்று எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" அப்.1:11.

"ஏனெனில் கர்த்தர் தாமே ஆர வாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்த வர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" 1 தெச. 4:16.

"நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" யோவா.14:3.

"...மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார்" வெளி. 22:20.

வேதவாக்கியங்கள் அவரது உண்மையான தனிப்பட்ட வருகை யினை சம்பவங்கள் மூலமாக விவரிக் கின்றன. அதே இயேசுவானவர்தான் - பதிலாளியல்ல, ஏதோ தூதுவனல்ல, "ஆனால் இதே இயேசுவானவர் அப்படியே மறுபடியும் வருவார்" தெளி வாகப் பார்க்கும் நிலையில் வாஞ்சை யோடு பார்த்த கண்களுக்கு முன்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட போது "அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது" அப். 1:19

அப்படியே அவர் திரும்பி வரும் போது கண்களுக்கு முன்பாக, தனி நபராக மகிமையோடே வருவார். "இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத்தார் எல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்பு வார்கள். அப்படியே ஆகும் ஆமென்" வெளி.1:7. "...தமக்காகக் காத்துக் கொண் டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவ மில்லாமல் தரிசனமாவார்" எபி.9:28. இவ்வுலகில் அவர் இரட்சித்த மக்களின் மீட்பை முடிவுறச் செய்து அவர்களை தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நிறுத்தவும் யூதா 24. ஆட்டுக் குட்டியானவருடைய கலியாண விருந்தில் சேர்க்கவும் வருகி றார். எல்லாத் தவறுகளையும் சரிப்படுத் தவும், நன்மைகளை பலப்படுத்தவும், சாபங்களை அகற்றவும், கண்ணீர்கள் யாவையும் அனைவரது முகத்திலிருந்து துடைத்துப் போடவும், வேதனைகளை விழுங்கிப் போடவும் மரணத்தை வெற்றி சிறக்கவும் அவர் வருகிறார்.

இந்த வாக்குத்தத்தம் அடிக்கடி எழுதப்பட்டதும் மிகவும் பரிசுத்த மானதுமாகும்.

எழுப்புதலுக்காக விசுவாசத்துடன் ஜெபித்தல்

Pray in Faith for Revival

Rich Owen Roberts

தேவன் விசுவாசமுள்ள ஜெபத்தைக் கேட்கிறார். விசுவாசமற்ற இருதயத்திலிருந்து எழும்பும் ஜெபம் மேற்கொள்ளுவதில்லை. "இயேசு அவர் களை நோக்கி தேவனிடத்தில் விசுவாச முள்ளவர்களாயிருங்கள், எவனாகிலும் இந்த மலையை பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப் படாமல் விசுவாசித்தால் அவன் சொன்ன படியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால் நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவை களைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவை களைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லு கிறேன்" மாற்.11:22,24.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றில் எது கடினமானது? தேவன் ஒரு மலையை அதனிடத்திலிருந்து அகற்றி கடலுக்குள் தள்ளுவதா அல்லது தமது பணியை எழுப்புதலடையச் செய்வதா? எதுவும் அவருக்குக் கடினமல்ல, நாம் தான் கடினங்களோடிருக்கிறோம். தேவன் பெரிய காரியங்களை நமக்குச் செய்வார் என்பது ஏறக்குறைய முடியாதது என்று எண்ணுகிறோம். எனவே நமது ஜெபங்களும் ஒன்றுமில்லாமற் போய் விடுகின்றன. விசுவாச முள்ள ஜெபம் தேவ சித்தத்தை அறிவதோடு தொடர்புடையது. எழுப்புதல் என்பது தேவசித்தம் என்பதை அறியாமல் பெலவீனமான விசுவாசத்தோடு ஜெபித்தால் தேவன் இரக்கமாய் தமது ஜனத்தை எழுப்புதல் அடையச் செய்வார். ஆனால் நமது ஜெபங்கள் வெற்றிக்கு அவசரமான உறுதியை இழந்துவிடும்.

இரண்டு விசுவாசத்தைத் தூண்டும் கேள்விகள்

முதலாவது எழுப்புதல் தேவ மகிமைக்கானதாக இருக்குமா? எழுப்புதல் தேவ மகிமைக்கு ஆதரவாக இராவிட்டால் அது சந்தேகமான தன்மையுடையது. ஒரு அற்புதமான ஆழமும் அகலமுமான மகிமை நிறைந்த எழுப்புதலைப் போல அதிகமான மகிமையை தேவனுக்கு வேறு எதுவும் கொண்டு வருவதில்லை. அதனால் மில்லியன் கணக்கான பின்மாறுதலடைந்தவர்கள் உற்சாகமான கிறிஸ்தவர்களாக மாறுகிறார்கள். எண்ணிலடங்கா அவிசுவாசிகள் இரட்சிப்பின் அனுபவத்தோடு கிறிஸ்து வண்டை சேர்க்கப்படுகிறார்கள்.

சங்கீதக்காரன் ஜெபங்கள் இந்த சத்தியத்தை மறுபடியும் மறுபடியும் கூறுகின்றன. "உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்து களிகூரும்படி உமது ஜனங்களை உயிர்ப்பிக்க மாட்டீரோ?" சங்.85:6. எழுப்புதல் மூலம் தேவ மகிமை அற்புதமாகப் பெருகும். இதை நினைவில் வைத்து நாம் நம்பிக்கையோடு ஜெபிக்கலாம்.

இரண்டாவதாக எழுப்புதல் பூமியில் கிறிஸ்துவின் பணியை உண்மையாக முன்னேற்றுமா? "உமது சித்தம் பரமண்டலங்களிலே செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்ற விண்ணப்பத்தை இந்த எழுப்புதல் நிறைவேற்ற முக்கிய காரணியாக இருக்குமா? எழுப்புதலைத் தவிர ஏதாவது தேவ சித்தத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்ற இத்தனை உதவி செய்யுமா என்று கேட்கலாம்.

உண்மையாகவே எழுப்புதலுக்கான ஜெபம் தேவ சித்தத்திற்குள் அடங்கியுள்ளது. அது பரலோகத்துக்கு நேராக உறுதியோடும் விசுவாசத்தோடும் உயர்த்தப்படக் கூடியது.

இது ஒரு உபதேசமோ, பிரமாணமோ, சபையோ, பாடல் பாடுவதோ அல்லது பிரசங்கம் கேட்பதோ அல்ல. இவை ஆண்டவராகிய இயேசுவை உண்மையாக சுட்டிக் காண்பிக்கும், ஆனால் அவை ஆண்டவரல்ல. அவர் இவையெல்லாவற்றிற்கும் மிக உயர்ந்தவர். உத்தம விசுவாசிக்கு நோக்கமானவர்.

நீங்கள் சரியான உபதேசமுடையவர்களாயிருந்தும் சுய வாழ்வில் வெற்றியே இல்லாதவர்களாயிருக்கலாம். தேவனோடுள்ள உள்ளான உறவின் சந்தோஷம் இல்லாமலிருக்கலாம். ஆனால் கிறிஸ்துவே நமது இலக்கு அல்லது ஜீவன் நமது எல்லாவற்றிற்கும் எல்லாமானவர் என்று நாம் கண்டு கொள்ளும் போது, அவர் எல்லாவற்றிலும் நமக்குப் போதுமானவராயிருக்கிறார். ஒரு மதமல்ல ஆண்டவராகிய இயேசுவே உங்கள் இருதயத்திலும் வாழ்விலும் வீற்றிருந்து "கிறிஸ்து எனக்கு ஜீவன்" பிலி.1:21 என்ற மகிமையான அனுபவத்தைப் பெற முடியும். "...என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். .... கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படி... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன்" பிலி. 3:8-10.

அன்பானவர்களே, நீங்கள் விசுவாசத்தினாலே கல்வாரிக்குச் சென்று உங்கள் பாவங்களை அவருடைய பரிசுத்த விலையேறப் பெற்ற இரத்தத்தின் மூலம் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு விட்டீர்கள். ஆனால் உங்களை நேசித்து தம்மையே உங்களுக்காக அர்ப்பணித்தவரும் இப்போது பிதாவின் வலதுபுறத்தில் உட்கார்ந்திருப்பவருமானஅவருக்கு உங்களை முழுவதும் அர்ப்பணித்து விட்டீர்களா? உங்கள் இருதயம், வாழ்வு யாவையும் அவருக்கு சொந்தமாக்கி விட்டீர்களா?

நமது வாழ்வு முற்றிலும் அவருக்கே அர்ப்பணிக்கப்பட ஆண்டவர் உதவி செய்வாராக. அப்போதுதான் அவரது பரிபூரண ஜீவன் நம்மூலமாக மற்றவர்களுக்குப் பாய்ந்து செல்ல முடியும். இந்த உலக யாத்திரையில் அவர் நமது நம்பிக்கையும் மகிமையுமாயிருந்து, அவர் வெளிப்படும் போது அவரோடு மகிமையில் வெளிப்படச் செய்வார் கொலோ. 3:4

நமது ஜீவனான இயேசு

Christ who is our life

Henry C. Spencer

நமது ஆண்டவராகிய இயேசு தேவனுடைய ஞானம், வல்லமை மற்றும் அன்பு ஆகியவற்றின் பூரணமானவர். "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்" யோவா.1:16. "அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" கொலோ. 2:3. ஆண்டவராகிய இயேசு ஒருவரே முற்றிலும் அழகானவர். பதினாயிரங்களில் சிறந்தவர், சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி, ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவர் உன். 5:10,16, 2:1, வெளி. 17:4, 19:16, 1 தீமோ. 6:15.

இத்தகைய மகிமையின் இரட்சகர் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஜீவனாயிருக்கிறார். அவரில் நமது ஆத்துமாக்களின் உடைமைகளைக் காண்கிறோம். ஒவ்வொரு வினாடியும் அவரிலிருந்து ஒளி, பெலன், சமாதானம் மற்றும் சந்தோஷம் ஆகியவைகளைப் பெறுகிறோம். அவரில்தான் நமது வாழ்வு வெற்றியடைவதோடு அவரில் வாழ்வதால் பாவத்தின் மேல் தொடர் வெற்றி கிடைக்கிறது. அவரது வாழ்வு, வல்லமை, வெற்றி, சந்தோஷம், நிறைவு ஆகியவை நமக்குச் சொந்தமாகின்றன.

கிருபையினால் இந்த வெற்றி வாழ்வை அனுபவிக்கிறீர்களா?

ஆண்டவராகிய இயேசு மட்டுமே உங்கள் வாழ்வை மறுரூபப்படுத்தி, உங்கள் ஆத்துமாவின் ஆழமான வாஞ்சையை திருப்திப்படுத்துவார். அவர் தான் புது சிருஷ்டியின் வாழ்வுக்கு மையமும் அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் உறைவிடமுமாயிருக்கிறார்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

"ஜெபம் என்பது பரலோகமும் பூமியும் ஒன்றையொன்று முத்தமிடும் தருணம்" என்று ஒரு யூத ஆத்மிகவாதி கூறுகிறார்.

ஜெபத்திற்கு பயப்படுவது போல சாத்தான் வேறு எதற்கும் பயப்படுவதில்லை. அவனுடைய மிகப் பெரிய கரிசனை நாம் ஜெபிக்காமலிருக்கச் செய்வது தான்.

சுயம் நம்மை அடக்கி ஆளும் போது தேவன் நம்மிடம் கிரியை செய்ய முடியாது. ஏனெனில் ஆவியின் கனி நம்மை நிரப்ப சுயம் உடைக்கப்பட வேண்டும்.

"சாத்தான் நமது கடின உழைப்பைப் பார்த்து நகைக்கிறான், நமது ஞானத்தைப் பரிகாசம் பண்ணுகிறான். ஆனால் நாம் ஜெபிக்கும் போது அவன் நடுங்குகிறான்" என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

நமக்குள்ளிருக்கும் சுயம் அகற்றப்படாமல் ஆண்டவராகிய இயேசு நம்மில் வாழ்ந்து தம்மை வெளிப்படுத்த முடியாது.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason